இருக்கின்றன. அவற்றுக்கெல்லாம் கட்டடம் கட்டி மாற்றும் முயற்சியை, நம்முடைய நிதிநிலைமைக்கேற்ப, படிப்படியாக அரசு மேற்கொள்ளும்.

மாநிலக் கல்லூரியில் மாலைநேர வகுப்புகள்

*108 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1975–76 முதல் சென்னை மாநிலக் கல்லூரியில் எந்தெந்த பட்ட மேற்படிப்பு பாடங்களில் மாலைநேர வகுப்புகள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, செயற்குறிப்பு எதுவும் இல்லை.

கும்பகோணம் கலைக் கல்லூரி

*109 வினா—திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் அரசினர் கலைக் கல்லூரியில் 1975–76 ஆம் ஆண்டு முதல் Chemistry M. Sc., வகுப்புகள் துவங்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. செ. அரங்கநாயகம் : எம்.எஸ்ஸி. வகுப்பு தொடங்குவதற்கு கட்டடங்களெல்லாம் கட்டி முடிக்கப்பட்ட நிலையில் என் மேல் பட்டப்படிப்பைத் தொடங்க அரசு தயங்குகிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மேல் பட்டப்படிப்பைக் கொண்டுவரும் தன்மையில் அது எந்தெந்தத் துறைக்குத் தேவையோ அந்தத் துறையை எந்தெந்த இடங்களில் அதற்கான வசதி வாய்ப்புகள் செய்ய முடியுமோ அந்த அளவுக்குதான் செய்ய முன்வர இயலும். இந்த ஆண்டைப் பொறுத்தவரையில் ஐந்து இடங்களில்தான்